1970 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ)—துணை மாஜிஸ்ட்ரேட் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களைத் தாக்கிய தாகச் சொல்லப்படும் சுந்தரம் மீது மதுராந்தகம் காவல் நிலையத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை 110 (e) & (f) பிரிவின் கீழ் 222/1969-ம் எண் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் குற்றவாளி 13—8—1969 அன்று எம்.சி. 128/1969-ம் எண்ணில் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 119-வது பிரிவின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.

திரு. கே. வினயகம்: இந்தக் குறிப்பிட்ட மாஜிஸ்ட்ரேட் எந்தக் காரணத்திற்காக இது மாதிரித் தாக்கப்பட்டார்? இது முக்கியமாகக் கவனம் செலுத்தப்படவேண்டிய பிரச்சனை. மாஜிஸ்ட்ரேட்டுகளையும், ஜட்ஜுகளையும் தாக்குவது என்ற நிலைமையை இப்படியே விட்டு வந்தால் நாட்டில் நீதி நிலைமை இருக்காது. ஆகவே, எதிர்காலத்தில் இந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் இருக்க என்ன பாதுகாப்பை மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் ஜட்ஜுகளுக்கும் அரசாங்கம் தர முயற்சிக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தியாவினுடைய பெரிய நீதிபதியையே கூட ஆபத்து அணுகியது என்பதை மறந்து விடுவதற்கில்லை. சுந்தரம் என்பவர் பல மதுவிலக்கு வழக்குகளில் தண்டனை பெற்றவர். மாஜிஸ்ட்ரேட்டைத் தாக்கியதற்கு அது காரணமாக இருக்கலாம். அவர் மீது உடனடியாக வழக்குத் தொடரப்பட்டது. இன்னொரு கோர்ட்டிலே அந்தக் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to state whether after this incident, Government have given Police protection to Magistrates and Judges, and if so, the particulars thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்படியே சென்று கொண்டிருந்தால் பிறகு வக்கில்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும்.

Complaints of amplifier nuisances

*68 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Control Room in the Office of the Commissioner of Police, Madras City has been directed to deal with complaints of amplifier nuisances?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம். ஒலிபெருக்கிப் புகார்கள் வந்தால் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : ஒலிபெருக்கி அமைத்துக் கொள்ளு வதற்கு அனுமதியைச் சென்னையில் இருந்து பெறவேண்டுமென்ற நிலை இருக்கிறது. இந்தப் பொறுப்பு மாவட்ட கலெக்டர் அவர்களி டத்தில் ஒப்படைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தந்த மாவட்ட ரீதியிலும் வழங்க ஏற்பாடு இருக்கிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்தமாதிரி ஒலிபெருக்கி பற்றிய கம்ப்ளெயின்ட்ஸ் எவ்வளவு விசாரிக்கப்பட்டுள்ளன ? அதனுடைய தொந்தரவு, விசாரணைக்குப் பிறகு குறைந்திருக் கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : புகார்களுடைய எண்ணிக் கையின் விவரம் இல்லை. புகார்கள் வந்தால் உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்ட இடத்திற்குச் சென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, மார்கழி மாதத்தில் கோவில்களிலே ஒலிபெருக்கி வைத்துக்கொள்ள இலவச அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஒரு பர்லாங் தூரத்திற்குள் இரண்டு மூன்று கோவில்கள் இருந்தால் இரண்டு மூன்றிலும் ஒலிபெருக்கி வைத்திருப்பதால் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, குறிப்பிட்ட நேரத்தில்தான் வைக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : என்னுடைய வீட்டு வாசலில் ஒரு கோவில் இருக்கிறது. மார்கழி மாதத்தில் இப்படிப் பட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது. அது என்னைக் காலையில் விரைவில் எழுப்ப உதவியாக இருக்கிறது.

திரு. கே. விநயகம் : ஒலிபெருக்கியை திருமணம், பொதுக் கூட்டம் போன்ற விசேஷங்களில் வைக்க வேண்டியதுதான். ஆனால் விளம்பரத்திற்காக ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுகிறது. முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியில் வடபழனியில் திருவிழாக் காலங்களில் ஒலிபெருக்கி வைத்து இந்த சோப்பை வாங்குங்கள், இந்த எண்ணெயைக் குடியுங்கள், இந்த மாத்திரை யைச் சாப்பிடுங்கள் என்று விளம்பரம் நடப்பது தெரியுமா ? அவர்கள் லைசென்ஸ் வாங்கிக் கொண்டு நடத்துகிறார்களா? உங்கள் கட்சிக்காரர்கள் நடத்துவதாகக் கேள்வி, அதையும் விசாரிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் கட்சிக்காரர்களைப் பற்றி நாங்கள் சொன்னால் திரு. விநயகம் அவர்களுக்கு ஆத்திரம் கொப்பளிக்கிறது. உடனே, அப்படிச் சொல்லக்கூடாது என்று கூறுகிறார்கள். அவர்கள் சொல்லுவதைப் பற்றி நான் அவ்வளவாக வருத்தப்படவில்லை. வடபழனி திருவிழாவில் அப்படி நடந்திருந்

1970 ஜனவரி 24]

தால் அதைத் தடுப்பதற்கு நிச்சயமாகக் கவனிக்கப்படும். தி.மு.க. ஆட்சியில் திருவிழாவில் ஒலிபெருக்கிக்கும் தடையா? என்றெல்லாம் சொல்லாமல் இருந்தால் போதும்.

Fire accidents in Thanjavur district

*69 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of persons taken into custody in connection with the mysterious fire accidents that have taken place in Kumbakonam, Thanjavur, Mayuram and other surrounding areas of Thanjavur district in the course of the third week of July 1968 and in the first half of August 1968;

(b) whether some chemicals are being used by the miscreants to create fire in the above said places; and

(c) whether the Government have appointed any special police official to help the investigation by the local police?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 451 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(இ) இல்லை.

(உ) இல்லை.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister whether these fire accidents were intentional or accidental?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த விபத்துக்கள் எல்லாம் விபத்துக்கள்.

ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிகள்

**70 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஹையர் கிரேடு ஆசிரியர்களின் பதவிகளை செகண்டரி கிரேடாக மாற்றும் உத்தேசம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்படி எத்தனை ஹையர் கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாவார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) உயர் துவக்கத்தரப் பதவிகளில் (High Grade Posts) பணிபுரிந்து வரும் இடைநிலைத் தர ஆசிரியர்கள் (Secondary Grade Posts) அனைவரும் இடைநிலைத் தரப் பதவிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.